# சுரங்க பாதையிலும் 'சிக்னல்' கிடைக்கும்

– நமது நிருபர் –

சுரங்கப்பாதையில் செல்லும் போது, மெட்ரோ ரயிலில், மொபைல் போன், 'சிக்னல்' கிடைக்கும் வகையில், 'ஜியோ' நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, சென்ட்ரலுக்கும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

மெட்ரோ ரயில், திருமங்கலம் – சென்ட்ரல் மற்றும் சைதாப்பேட்டை – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரை, சுரங்கப்பாதையில் இயக்கப்படுகிறது.

இதில், திருமங்கலம் – சென்ட்ரல் இடையே சுரங்கப்பாதையில் இயக்கப்படும் ரயில்களில், பயணியருக்கு மொபைல் போன் சிக்னல் கிடைக்க, 'ஜியோ' நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை – தேனாம்பேட்டை, டி.எம். எஸ்., இடையே மெட்ரோ ரயிலில் மொபைல் போன் சிக்னல் கிடைக்கவில்லை. இது குறித்து, பயணியர் அதிருப்தி தெரிவித்தனர்.

இதையடுத்து, சுரங்கப்பாதையில், மொபைல் போன் சிக்னல் வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மெட்ரோ ரயிலில் பயணிக்கும் பயணியர், மொபைல் போனில், சிறப்பு நிகழ்ச்சிகளை பார்க்கும் வகையில், சலுகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.